# 18 எழுத்து நடையினை முன்னேற்றுதற்கான பரிந்துரைகள்: II தெளிவாகவும், துல்லியமாகவும், விறுவிறுப்பாகவும் எழுதுதலும் சுருக்குதலும்

**இலக்கு**

தம் முதல்மொழியில் பரந்த நடையியல் திறமையினை மேம்படுத்துவதற்குரிய வாய்ப்பினை மாணவர்களும் பெற வேண்டும். இது பகுதி அல்லது துணைத்திறன்களை உள்ளடக்கும், அவையாவன, "சரியாக விவரணம் செய்யும் திறன்", "தெளிவாகச் சொல்லும் திறன், உற்சாகமூட்டும் வகையில் சொல்லுதல்" ‘முதலியன. எனினும், பொருத்தமான தெளிவுறுத்தலும் பயிற்சியும் இல்லாமல், "சரியாக, தெளிவாக, கவர்ச்சியான முறையில" என்னும் சொற்கூறுகள் மாணவர்களுக்கு எவ்வித துணையுமற்ற உருவிலாக் கருத்துகளாகவும் சொற்களாகவுமே இருக்கும். பின்வரும் மதியுரைகளின் நோக்கு என்னவெனில், இச்சொற்கூறுகளை உண்மையானவையாகவும் பயன்படுவனவாகவும் வழங்குதலுடன், அவற்றைப் பயிற்சி செய்தற்கு பொருத்தமான பயிற்சிகளையும் எழுத்து வாய்ப்புகளையும் ஏற்படுத்துவதாகும்.

## 1. தெளிவான விவரணங்கள்: பலவிதமானவை

2 - 9 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

கருவிகள்:
விற்பனைச் சீட்டு, ஏனைய பொருட்கள், மாற்றினைப் பொறுத்து (வலம் பார்க்கவும்).

- ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் கடைப்பற்றுச்சீட்டு ஒன்றை (அல்டி, கொஸ்ற்கோ, வல்மார்ட், பப்ளிக்ஸ், முதலியன) வகுப்புக்கு கொண்டுவந்து A3 தாளின் நடுப்பகுதியில் ஒட்டுவான்/ஒட்டுவாள். மாணவர்கள் பற்றுச்சீட்டைச் சுற்றி, பற்றுச்சீட்டிலுள்ள பொருட்களால் என்ன செய்யலாம் என்பதை முடிந்தவரை துல்லியமாக எழுதுவர். பற்றுச்சீட்டிலுள்ள பொருட்களும் விளக்கமும்/விவரணமும் ஓர் அம்புக்குறியால் தொடுக்கப்படுகின்றன. (கருத்து "Language Window", writing, page 29 என்பதிலிருந்து).

| | |
|---|---|
| மாட்டிறைச்சி | 5.20 |
| வாதுமை பருப்பு | 5.40 |
| லெற்றூஸ் | 2.10 |
| உப்பு | 0.95 |
| மா | 1.80 |
| கைக்குட்டைகள் | 5.20 |
| முட்டைகள் (வேறுபாடிலா) | 3.60 |
| வாட்டுப் பாண் | 2.80 |
| இரப்பர் கையுறைகள் | 3.80 |
| உருளைக்கிழங்கு | 5.60 |
| தோல்சீவுகருவி | 3.85 |
| மணம் நீக்கும் குச்சி | 3.85 |
| ஸ்பொன்ஜ் (3 சிறுகட்டு) | 7.45 |
| துருவிய பாற்கட்டி | 3.60 |
| மொத்தம் | 53.95 |
| காசு | 60.00 |
| மிகுதி | 6.05 |

எங்களிடம் பொருட்கள் வாங்கியதற்கு உங்களுக்கு நன்றி.

முட்டைகளை பலவிதமாக சமைத்து உண்ணலாம். அவை கடினக்கொதியாக அல்லது 3 மணித்துளி மென்கொதியாக உண்ணலாம். பொரித்த அல்லது பொரித்துக் கிளறியது மிக நன்றாயிருக்கும். எனக்கு மிக விருப்பமானது காளானுடன் முட்டைப் பொரியலாகும். கேக்குகள் விசுக்கோத்துகள் செய்வதற்கும் முட்டைகள் பயன்படுகின்றன.

என் அம்மா என் தம்பிக்கு பிறந்தநாள் கேக் செய்ய மா பயன்படுத்துவாள். மிகுதி மாவில் பிற்ஷா மாப்பிசைவு செய்வாள், விழாவுக்கு வந்த பிள்ளைகள் தமக்கு விருப்பமான பொருட்களை அதன்மேல் வைப்பர்.

தோல் சீவுகருவி உருளைக் கிழங்கு, கரட் போன்ற பல வகைக் காய்கறிகளின் தோலுரிக்கப் பயன்படுகிறது இதனால் பெருமளவு வீணாக்கப்படாது,

- ஆசிரியர் ஒவ்வொரு மாணவனுக்கும்/மாணவிக்கும் ஒரு பொருளைக் (அதாவது, ஒரு துணி அல்லது ஒரு சிறிய தகரம்) கொடுக்கிறார். மாணவர்கள் அப்பொருளின் பெயரைக் குறிப்பிடாமல் (!) "பொருள் XY" எனக் குறிப்பிட்டுத் தம் பொருட்களை முடிந்த அளவு விவரித்து எழுதுவர். பின்னர் பொருட்கள் வகுப்பறையின் இடப்பக்கத்திலும் எழுத்து விவரணங்கள் வலப்பக்கத்திலும் வைக்கப்படும். எழுத்துருக்களுக்கு எண்களிடப்படும், பொருட்களுக்கு எழுத்துடனான சிட்டையிடப்படும். இதனால் மாணவர்கள் விவரணங்களையும் பொருட்களையும் சரியாக நேர்ப்படுத்த முயற்சிப்பர். (எ.கா. 3 = C) (மேலே #7.2 ஐயும் பார்க்க.)

- மாற்றுகள்: வேறுபட்ட விலங்குகளின் (அடைத்த பொம்மைகள், படங்கள்) படங்களை விவரித்தல் அல்லது "விற்பனைக்கு" அல்லது "தொலைந்தவையும் கண்டுபிடிக்கப்பட்டவையும" விளம்பரங்களுக்குப் பின்னணிக் கதை.
- ஆசிரியர் அல்லது மாணவன்/மாணவி ஒரு சிறிய சைகையை அல்லது செயற்பாட்டை (எ.கா. ஓர் ஒதுக்கிடத்திலிருந்து ஒரு நூலை எடுப்பதாக) மாணவர்கள் அச்செயற்பாட்டை முடியுமான வரை மிக விரிவாக விவரிக்க முயல்வர். அவர்களின் விவரணங்கள் பின்னர் ஒப்பிடப்பட்டு கலந்துரையாடப்படும். மாற்று (மிகு கடினம்): இரண்டு மாணவர்கள் ஒரு சிறிய காட்சியினை நடிக்கின்றனர் (எ.கா. வாழ்த்துக்கூறல்); மற்ற மாணவர்கள் அதனை முடிந்தவரை மிகுந்த விவரத்துடன் விவரிக்கின்றனர்.
- எங்கள் பூட்டிக்கு எப்படி ஒரு கைப்பேசியைப் பயன்படுத்தல் அல்லது எப்படி ஒரு கணினியைப் பயன்படுத்தி இணையத்துக்குள் நுழைதல் என்பதை விளங்கப்படுத்தல் வேண்டும் என நாம் கற்பனை பண்ணுவோம். இணையர்களாக, மாணவர்கள் அவ்விவரணங்கள் எவ்வளவு பயன்பாடானவை என்பதை தேர்ந்தறிய முற்படுவர்.

---

## 2. தெளிவாகவும் உயிரூட்டமுள்ள முறையிலும் விளக்குதல்: பலவிதமானவை

2 - 9 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

- ஆசிரியர் மாணவர்களுக்கு தெளிவாகவும் கவர்ச்சிகரமாகவும் எழுதுதற்குப் பின்வரும் "செய்முறையை" வழங்குகின்றார்: "கதையின் தலைமை மாந்தர்(கள்) போல உங்களை ஆக்கிக் கொள்ளவும். அவர்கள் எவ்வாறு உணர்வார்கள், எண்ணுவார்கள், அவர்களுடைய கவலைகள், நம்பிக்கைகள், என்பன பற்றி கண்களை மூடிக்கொண்டு எண்ணிப்பார்க்கவும். இப்பொழுது இதனை உங்கள் எழுத்துருவில் விவரிக்கவும்." மாணவர்கள் பின்னர் வெவ்வேறு பொருத்தமான தலைப்புகளைப் பயன்படுத்தி "செய்முறையை" எழுதுவதற்கு முன்னர் வாய்மொழியூடாகப் பயிற்சிசெய்வர். எடுத்துக்காட்டுகள்: "எங்கள் உணவு மேசையில் ஒரு கலந்துரையாடல்", "என் பெற்றோருடைய பிறந்த நாட்டில் ஒரு பட்டறிவு", "என் அம்மம்மாவின் இளம் வயதுக் கதைகள்".
- இதே மாதிரி தொடரும் இன்னொரு "செயற்பாடு" பின்வரும் அறிவுறுத்தல்களுடன் பயிற்சி செய்வதற்கு: "நீங்கள் எழுதுவதற்கு முன்னர் உங்கள் கண்களை மூடவும். உங்கள் கதை பற்றி எண்ணி, அதனை ஒரு திரைப்படமாக உங்கள் மனத்தில் கற்பனை பண்ணவும். இப்பொழுது எல்லாவற்றையும் முடிந்தவரை மிகுந்த விரிவாக எழுதுக.
- தன்கூற்றுப் பயன்பாடு பெரும்பாலும் மிகுந்த தெளிவுக்கு இட்டுச்செல்லும் என்பது முன்னறிவூட்டாகும்: "தன்கூற்றைப் பயன்படுத்துக, கதைமாந்தர் தங்களுக்குள் பேசிக்கொள்ள விடுக!" இதுகூட, முதலில் வாய்மொழியாகச் செய்து பின்னர் எழுதவும்.
- சிலவேளைகளில் படர்க்கைக்கு மாறாக தன்மையில் எழுத்துருக்களை எடுத்துரைக்கும்போது அவை "உயிருடையனவாகவும்" கவர்ச்சியுடையனவாகவும் அமைகின்றன. இதனையும் மேலுள்ள பரிந்துரைகளையும் மாணவர்கள் பின்பற்றுவரேல், அவர்கள் வெற்றியுடையவர்களாவர்.
- படக் கதைகள் தெளிவான உயிர்ப்புள்ள எழுத்துப் பயிற்சியை மேற்கொள்ள தக்க வாய்ப்பினை வழங்குகின்றன. இந்த வகையில் மாணவர்கள் கருத்துகளைத் தேடிச்செல்லும் நிலையிலிருந்து ஆறுதல் பெற்று ஈர்க்கத்தக்க ஓர் எழுத்துருவினை எழுதுதற்குக் கருத்தூன்றவைக்கும். எழுத்துருக்கள் பின்னர் மாணவரிடையே ஒப்பிடப்பட்டு கலந்துரையாடப்படுவது இன்றியமையாததாகும்.
- கீழே (18.3 மற்றும் 21) விவரித்தபடி தெளிவான கவர்ச்சியுள்ள எழுத்து நடையைப் பயிற்சிசெய்யக் கதைகளை மீட்டெடுத்துரைத்தல் மதிப்புள்ள செயல்திறனுடைய வாய்ப்புடையதாகும்.

III